Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

Case No.C.C.No. 475/2023

Deposition of witness for Prosecution P.W.5 Date : 25.06.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | செல்வம் | Village : | மொண்டிப்பாளையம் |
| Father's Name : | சின்னக்காளி | Taluk : | அவிநாசி |
| Age : | 38 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of June 2025 **(Accused absent, Section 355 BNSS Petition filed and allowed.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் மொண்டிப்பாளையத்தில் குடியிருந்து கம்பெனியில் டெய்லராக வேலை செய்து வருகிறேன். நான் இந்த வழக்கில் காவல் துறையினர் விசாரித்த போது சுமார் 10 வருடங்களுக்கு முன்பு பசூர் அருகே நடந்த ஒரு விபத்து தொடர்பாக கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அது நடந்து 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் எங்கு வைத்து நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. இவ்வழக்கு தொடர்பாக அப்போது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எந்த தேதியில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும் நான் கையொப்பம் செய்து கொடுத்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றும் தற்போது ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் வாங்கினார்கள் என்று சொன்னால் சரிதான்.

Sd/-V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.